**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**சுருக்கு முறை வழக்கு எண். 248/2024.**
**வழக்கு சாட்சி – அ.சா. 3 (பட்டியல் சாட்சி –3 ).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பாஸ்கரன். | ஜாதி | |
| தந்தை பெயர் | ராமர். | தொழில் | காவல் உதவி ஆய்வாளர் (பணி ஓய்வு). |
| கிராமம் | தேனி | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 60/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2026.

**(2, 3, 5, 8, 9, 12 ஆகிய எதிரிகள் ஆஜர். 1, 4, 6, 7, 10, 11 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

(1) நான் தற்போது, தேனியில் குடியிருந்துகொண்டு, தமிழ்நாடு காவல் துறையில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 23.10.2023 ஆம் தேதி 12.30 மணிக்கு நான் தேனி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பொறுப்பிலிருந்தபோது, தேனி – அல்லிநகரம் கிராம நிர்வாக அலுவலகர் திரு. ஜீவா என்பவர் காவல் நிலையத்தில் ஆஜராகிக் கொடுத்தப் புகார் மனுவினைப் பெற்று, தேனி காவல் நிலையக் குற்ற எண். 544/2023, சட்டப் பிரிவுகள் – 143, 290 இ.த.ச –இன்படி வழக்குப் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. நான் இவ்வழக்கைப் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று, சம்பவயிடத்தைப் பார்வையிட்டு, சாட்சிகள் ஜீவா மற்றும் முருகன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

(2) எனது புலன் விசாரணையில் சம்பவம் உண்மையெனத் தெரியவந்ததால், கடந்த 23.10.2023 ஆம் தேதி 13.50 மணிக்கு தேனி, மாவட்ட ஆட்சியர் நுழைவு வாயிலில் முன்பு வைத்து, காரணம்கூறி, 1 முதல் 12 வரையிலான எதிரிகளை கைது செய்து, 14.00 மணிக்கு நிலையம் கொண்டுவந்து, திரேகப் பதிசோதனை செய்து, அவர்களை பாராவசம் ஒப்புவித்தேன். எதிரிகள் புரிந்த குற்றங்கள் பிணையில் விடக்கூடியது என்பதால், உத்தரவுப்படி பிணையில்

விடுவித்தேன். மேற்படி எதிரிகள்மீது சட்டப் பிரிவுகள் – 143, 290 இ.த.ச–இன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் நாள் திங்கட்கிழமை என்றால், அதுபற்றித் தெரியவில்லை. ஒவ்வொரு வாரம் திங்கட்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் மக்கள் குறைதீர்க்கும் நாள் நடைபெறும் என்றால், சரிதான். அன்றைய நாள் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றால், சரிதான். மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகமும், மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகமும் எங்கள் காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதி என்றால், சரிதான். மனுநாள் அன்று மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால், காவல் நிலையத்திலிருந்து அதிகமாக பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கும் என்றால், சரிதான். அன்றைய தினம் அசம்பாவிதம் ஏதேனும் நடந்தால் அங்கு பணியில் உள்ள போலீசார் எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுப்பார்கள் என்றால், சரிதான். அங்குள்ள போலீசார் தகவல் எதுவும் தெரிவித்துள்ளார்களா? என்றால், அது பற்றித் தெரியவில்லை.

(2) அன்றைய தினம் எங்கள் காவல் நிலையத்தில், காவல் நிலையப் பொறுப்பதிகாரி யார் என்றால், காவல் ஆய்வாளர் திரு. வெங்கடாசலம் ஆவார். அன்றைய தினம் யார், யாருக்கு என்ன பணி ஒதுக்கப்படும் என்று காலையிலேயே சொல்லிவிடுவார்கள் என்றால், சரிதான். என்றைய தினம் S.P. அலுவலகத்திற்கும், ஆட்சியர் அலுவலகத்திற்கும் யார், யார் காவல் நிலையத்திலிருந்து பணிக்குச் சென்றார் என நான் விசாரித்துத் தெரிந்துகொண்டேனா? என்றால், இல்லை. புகார் கொடுத்தபின், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய 1/2 மணி நேரம் ஆனது. புகாரைப் பெற்றவுடன் நான் விசாரணை செய்து, வழக்குப் பதிவு சென்தேனா? என்றால், புகாரைப் பெற்று, வழக்குப் பதிவு செய்தேன்.

(3) புகாரைப் பெற்றவுடன் அன்றைய தினம் ஆட்சியர் அலுவலகத்தில் காவல் பணியில் இருந்தவர்களிடம் விசாரித்துத் தெரிந்துகொண்டேனா? என்றால், இல்லை. S.P. அலவலகத்திற்கும், எங்கள் காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு நேரத்தில் செல்லலாம் என்றால், 10 நிமிடங்களில் செல்லலாம். சம்பவம் நடந்ததாகச் சொல்லும் நேரம் 11.30 மணி என்றாலும், புகார் கொடுக்கப்பட்டது 12.30 மணி என்றாலும், 1 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணத்தினை முதல் தகவல் அறிக்கை பத்தி எண். 8–இல் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். புகாரை எழுதிக் கொடுத்தாரா? அல்லது தட்டச்சு செய்து கொடுத்தாரா? என்றால், தட்டச்சு செய்து கொடுத்தார். காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்து கொடுக்கவில்லை

என்றால், சரிதான்.

(4) புகாரில், 3 நபர்கள் பெயர்கள் குறிப்பிட்டு மற்றும் 9 நபர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கையில் முதலில் 3 எதிரிகள்மீது மட்டும்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். பின்னிட்டு, 9 எதிரிகளை எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால், விசாரித்துத் தெரிந்துகொண்டேன். அன்றைய நாள், மனுநாள் என்பதால், மனுக் கொடுக்க வந்த எதிரிகளை நாங்கள் தடுத்து, கைது செய்து, பின்னிட்டு V.A.O. – விடம் புகாரைப் பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிகள் முறையான S.P. அலுவலகத்தில் மனுக் கொடுக்க வந்தாகவும், நாங்கள் பொய்யாக, அவர்கள் மீது புகார் கொடுக்கச் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. எங்கள் காவல் நிலையத்திலிருந்து, தேனி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு வர எவ்வளவு நேரம் ஆகும் என்றால், 1/2 மணி நேரம் ஆகும்.

(5) நான் வழக்குப் பதிவு செய்தவுடன், புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவிடவேண்டும் என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் எண். 15–இல் எத்தனை மணிக்கு அனுப்பப்பட்டதாக நேரம் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். புகார் மற்றும், முதல் தகவல் அறிக்கையை 13 நாட்கள் கழித்து, 06.11.2023 ஆம் தேதிதான் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு நான் எழுத்தர்வசம் ஒப்படைத்தேன். பின்னிட்டு, வழக்குப் பதிவு செய்துள்ளதாக, காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்த பொதுமக்கள் யாரும் இடையூறு ஏற்பட்டதாக புகார் கொடுக்கவில்லை என்றால், யாரும் முன்வரவில்லை. இடையூறு ஏற்பட்டிருந்தார் புகார் கொடுத்திருப்பார்கள் என்றாலும், அவ்வாறு இடையூறு ஏற்படாத காரணத்தினால்தான் புகார் கொடுக்கப்படவில்லை என்றாலும், சரியல்ல.

(6) அன்றன்றைய நிகழ்வுகளை போட்டோ மற்றும் வீடியோ பதிவு செய்து, காவல் நிலையத்தில் கொடுப்பார்கள் என்றால், முக்கிய நிகழ்வுகளை மட்டும் ஒப்படைப்பார்கள். நான் சம்பவயிடம்சென்று பார்வை மகசரோ, மாதிரி ளவரைபடமோ தயார் செய்யவில்லை என்றால், சரிதான். நான் அவ்வாறு சம்பவயிடம் சென்றிருந்தால், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடமோ தயார் செய்திருப்பேன் என்றால், சம்பவயிடம் செல்லாததால்தான் தயார் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக C.C.T.V. கேமிரா பொருத்தப்பட்டிருக்கும் என்றால், அந்த சமயத்தில் பொருத்தப்பட்டிருந்ததா? என்று எனக்குத் தெரியவில்லை. முதல் விசாரணையிலும், புகாரிலும்,

ஆர்ப்பட்டமோ, சாலை மறியேலா நடந்ததாக சொல்லப்படவில்லை என்றால், சரிதான். நான், உயர் அதிகாரியின் மீது மனுக் கொடுக்கச் சென்றதால், அவர்களைத் தடுத்து, கைது செய்து, பொய்யாக புகார் கொடுக்கச் செய்து, அதற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சொன்னதுபோல், சொன்ன நேரம் மற்றும் சொன்ன இடத்தில் வைத்து, இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் சரியாகப் புலன் விசாரணை செய்யாமல், எதிரிகள்மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்குச் சம்பவத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.21 18:53:29 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**